# யூன் – 07 – வியாழன்

## புனித ஜெம்மா னுஸ்

**ஆண்டவரே, உம் பாதைகளை நான் அறியச்செய்தருளும்: உம் வழிகளை எனக்குக் கற்பித்தருளும். திபா. 25:4**

## முதல் வாசகம் : 2 திமோத்தேயு 2 : 8 – 15

அன்பிற்குரியவரே! தாவீதின் மரபில் வந்த இயேசு கிறிஸ்து இறந்து உயிர்பெற்று எழுந்தார் என்பதே என் நற்செய்தி. இதனை நினைவில் கொள்.இந்நற்செய்திக்காகவே நான் குற்றம் செய்தவனைப் போலச் சிறையிடப்பட்டுத் துன்புறுகிறேன். ஆனால் கடவுளின் வார்த்தையைச் சிறைப்படுத்த முடியாது.தேர்ந்து கொள்ளப்பட்டவர்கள் மீட்பையும் அதனோடு இணைந்த என்றுமுள்ள மாட்சியையும் கிறிஸ்து இயேசு வழியாக அடையுமாறு அனைத்தையும் பொறுத்துக் கொள்கிறேன்.பின்வரும் கூற்று நம்பத் தகுந்தது "நாம் அவரோடு இறந்தால், அவரோடு வாழ்வோம். அவரோடு நிலைத்திருந்தால், அவரோடு ஆட்சிசெய்வோம் நாம் அவரை மறுதலித்தால் அவர் நம்மை மறுதலிப்பார்.நாம் நம்பத்தகாதவரெனினும் அவர் நம்பத்தகுந்தவர். ஏனெனில் தம்மையே மறுதலிக்க அவரால் இயலாது." இவற்றை நீ அவர்களுக்கு நினைவுறுத்து.வெறும் சொற்களைப் பற்றிச் சண்டையிடுவது பயனற்றது. அது கேட்போரின் அழிவுக்கு ஏதுவாகும் எனக்கடவுள் முன்னிலையில் சான்றுபகர்ந்திடு.நீ கடவுள்முன் ஏற்புடையோனாக நிற்க முழுமுயற்சி செய் உண்மையின் வார்த்தையை நேர்மையாய்ப் பகுத்துக்கூறும் பணியாளாகிய நீ வெட்கமுற வேண்டியதில்லை.

**பதில்பாடல் :** உம் பாதைகளை ஆண்டவரே நான் அறியச் செய்தருளும்.

## நற்செய்தி : மாற்கு 12 : 28 – 34

அக்காலத்தில் மறைநூல் அறிஞருள் ஒருவர், இயேசு அவர்களுக்கு நன்கு பதில் கூறிக்கொண்டிருந்ததைக் கண்டு அவரை அணுகி வந்து, "அனைத்திலும் முதன்மையான கட்டளை எது?" என்று கேட்டார். அதற்கு இயேசு, "இஸ்ரயேலே கேள். நம் ஆண்டவராகிய கடவுள் ஒருவரே ஆண்டவர். உன் முழு இதயத்தோடும் முழு உள்ளத்தோடும் முழுமனத்தோடும் முழு ஆற்றலோடும் உன் ஆண்டவராகிய கடவுளிடம் அன்பு கூர்வாயாக" என்பது முதன்மையான கட்டளை. "உன்மீது நீ அன்புகூர்வது போல் உனக்கு அடுத்திருப்பவர் மீதும் அன்புகூர்வாயாக" என்பது இரண்டாவது கட்டளை. இவற்றைவிட மேலான கட்டளை வேறு எதுவும் இல்லை" என்றார். அதற்கு மறைநூல் அறிஞர் அவரிடம், "நன்று போதகரே, "கடவுள் ஒருவரே அவரைத் தவிர வேறு ஒரு கடவுள் இல்லை" என்று நீர் கூறியது உண்மையே. அவரிடம் முழு இதயத்தோடும் முழு அறிவோடும் முழு ஆற்றலோடும் அன்பு செலுத்துவதும், தன்னிடம் அன்புகொள்வது போல் அடுத்திருப்ப வரிடம் அன்பு செலுத்தவதும் எரிபலிகளையும் வேறுபலிகளை யும்விட மேலானது" என்று கூறினார். அவர் அறிவுத்திறனோடு பதிலளித்ததைக் கண்ட இயேசு அவரிடம், "நீர் இறையாட்சியினின்று தொலையில் இல்லை" என்றார். அதன்பின் எவரும் அவரிடம் எதையும் கேட்கத் துணியவில்லை.

**தியானம்:** இயேசுவின் போதனையை சுருக்கமாக சொல்வதென்றால் அது "அன்புகட்டளை''யில் அடங்கும் எனலாம். இந்த அன்பு கட்டளைக்கு இருபக்கங்கள் உள்ளன என்று இயேசுவிளக்கினார். கடவுளை நாம் அன்பு செய்வதும் நம்மை அடுத்திருப்போரை அன்பு செய்வதும் அன்பின் இருபக்கங்கள் ஆகும். அவற்றில் ஒன்று இல்லை என்றால் மற்றதும் இல்லை. ஆனால் மனிதர்கள் கடவுளையும் பிறமனிதர்களையும் அடிப்படைக் காரணம் என்ன? கடவுள் நம் அனைவரையும் எல்லையற்றவிதத்தில் அன்பு செய்கின்றார் என்பதே அந்த அடிப்படையாகும். கடவுள் நம்மை அன்புசெய்வதால் நாம் கடவுளையும் அவரால் அன்பு செய்யப்படுகின்ற மனிதரையும் அன்பு செய்ய அழைக்கப்படுகின்றோம். கடவுளை அன்பு செய்வது பற்றிய கட்டளை இச6:4-5 லும், பிறரை அன்பு செய்வது பற்றிய கட்டளை லேவி 19:18லும், உள்ளது ஆனால் இயேசுவா அவ்விரு கட்டளைகளையும் ஒன்றாக இணைத்து நம் வாழ்வுக்கு அன்பின் நெறியை வகுத்து கொடுத்துள்ளார். கடவுளை முழு மனதோடு அன்பு செய்வோா பிறமனிதரையும் வேறுபாடின்றி ஏற்றுக்கொண்டு அன்புசெய்வார். இவ்வாறு அன்பு செய்வதற்கு இயேசுவே தலைசிறந்த முன்மாதிரியாக இருக்கின்றார். எனவே தான் அன்பு கட்டளை என்றால் என்ன என்று அறிந்து உணரவிரும்புவோா இயேசுவின் அடிச்சுவடுகளை பின்பற்றி நடந்தால் அன்பைச் சுவைத்து மகிழ்வுடன் வாழமுடியும் ஆமென்.